செ.வெ.எண்: 44 நாள்: 15.02.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

நமது மாவட்டத்தில் இந்தாண்டு பருவமழை பெய்யாததை தொடர்ந்து மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குளத்தூர் தாலுகா, குளத்தூரில் உள்ள விவசாயிகள் திரு.மணிராஜ், திரு.கோவிந்தன் ஆகியோரது வயல்கள், களமாவூரில் உள்ள விவசாயிகள் திரு.செல்வராஜ், திரு.சிவக்குமார் ஆகியோரது வயல்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் விராலிமலை தாலுகா, அவ்வையார்பட்டியில் உள்ள விவசாயி திரு.சுப்பிரமணியன், திரு.ரவி, திரு.அழகர், திருமதி.அழகம்மாள் ஆகியோரது வயல்களும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்களின் விபரம், பயிர்க்காப்பீடு செய்யப்பட்ட விபரம் போன்ற பல்வேறு தகவல்கள் கேட்டறியப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டாட்சியர்கள் திரு.சதீஷ் (விராலிமலை), திருமதி.கிருஷ்ணவேணி (குளத்தூர்) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**